<u>இராசிபுரம் நகராட்சி</u>

<u>நகர்மன்ற அவசரக் கூட்ட அறிவிப்பு</u>

**2025**–ஆம் வருடம் ஏப்ரல் மாதம் **01**–ஆம் தேதி செவ்வாய்கிழமை முற்பகல் **10.00** மணியளவில் இராசிபுரம் நகராட்சியின் அவசரக் கூட்டம் ஒன்று நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அது சமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் **28.03.2025**

தலைவர்,
நகர் மன்றம்

## பொருள்கள்

( 1 ) இராசிபுரம் நகராட்சிக்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-24-இன்கீழ் கீழ்கண்டப்பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு இப்பணிகளுக்கு உரிய தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி தற்போது பணிகள் நடைப்பெற்று வருகிறது.

<u>பணி விவரம்</u>

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | திட்ட நிதி பங்களிப்பு 50 % (ரூ. இலட்சத்தில்) | நகராட்சி பங்களிப்பு 50 % (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | பழைய பேருந்து நிலையத்தில் வணிக வளாகம் மற்றும் பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைத்தல் பணி | 586.00 | 293.00 | 293.00 |

மேற்காணும் திட்டப்பணிகளின் மதிப்பீட்டுத்தொகை ரூ. 586.00 இலட்சத்தில் மானியத் தொகை ரூ. 293.00 இலட்சம் போக மீதமுள்ள நகராட்சி பங்குத்தொகை ரூ. 293.00

இலட்சத்தினை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது நகராட்சியின் நிதி நிலை போதுமானதாக இல்லாத காரணத்தினால் பங்களிப்பாக வழங்கப்பட வேண்டிய தொகை ரூ. 293.00 இலட்சத்தினை ஏற்படுத்தும் விதமாக மேற்படி கடைகள் முன் ஏலம் செய்வதன் மூலம் கிடைக்க பெறக்கூடிய முன் வைப்புத்தொகை மற்றும் 12 மாத வாடகைத்தொகை சுமார் ரூ. 66.38 இலட்சம் போக மீதமுள்ள தொகை ரூ. 226.62 இலட்சம் மட்டும் அரசின் திட்ட நிதியிலிருந்து முழு மானியமாகவோ அல்லது அரசின் கடன் பகிர்வு திட்ட நிதியான SUIDF திட்டத்தின் மூலமாகவோ, நிதி ஒதுக்கீடு செய்து வழங்கிட நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு உரிய கருத்துரு அனுப்பி நிதி பெற நகர் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

அ) மன்றம் பரிசீலிக்கலாம்.

(4368/23/இ1)

**தீர்மானம் எண். 673**

ஒப்புதல் வழங்கப்பட்டது.

**(2)** இராசிபுரம் நகராட்சியின் **2025–2026–**ஆம் நிதியாண்டிற்கான வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி, ஆரம்ப கல்வி நிதிகளுக்கான உத்தேச வரவு செலவு மதிப்பீடு நகர் மன்றத்தின் ஒப்புதலுக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

( 2256/25 /பி1)

**தீர்மானம் எண். 674**

அனுமதிக்கப்பட்டது.

ஒம்/– முனைவர் இரா. கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி